

சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 115ஏ,120, 129ஏ வட்டங்களில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பொதுமக்களுக்கு நல திட்ட உதவிகள் வழங்கினார்.உடன் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் – மாநகராட்சி பணிகள் நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் உள்ளிட்டோர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சிஐடி காலனி, விவேகானந்தபுரத்தில் கூட்டுறவுத் துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள "முதல்வர் மருந்தகத்தில் நேற்று (24.2.2025) பொதுமக்களுக்கு மருந்து பொருட்களின் விற்பனையை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் (ஆயிரம் விளக்கு) டாக்டர்.நா.எழிலன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு ஆகியோர் உடன் உள்ளனர்.

## கொளத்தூர் பெரியார் நகரில் ரூ.210 கோடியில் கட்டப்பட்ட

# ‘பெரியார் அரசு மருத்துவமனை’யை திறந்து வைக்க வருகை தரும் முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு!

### சென்னை கிழக்கு மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, பிப்.25-

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், நேற்று (24.02.2025 திங்கள் கிழமை) மாலை 6 மணி அளவில், சென்னை ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலை, எம்.கே.டி. மகாலில், அவைத்தலைவர் கோ.ஏகப்பன் அவர்களின் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.





இக்கூட்டத்தில் சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள்: ப.தாயகம் கவி, ஜோசப்சாமுவேல், முன்னாள் எம்.எல்.ஏ. ப.ரங்கநாதன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: கே. சந்துரு, எம்.விஜயகுமார், கே.எஸ்.எம்.நாதன், எஸ். மணிமுடி, எம்.பி.எம்.ஷேக் அப்துல்லா, ஆர்.வரதன், மாவட்ட நிர்வாகிகள்: தேவஜவகர், ஜி.மகாதேவன், புனிதவதிஎத்திராசன், பகுதிக் கழக செயலாளர்கள்: செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, வே. வாசு, கூ.பி.ஜெயின், ஐ.சி. எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ், சொ.வேலு. வி.சுதாகர், எஸ்.முரளி, தொகுதி பொறுப்பாளர்கள்: பி.முனியாண்டி, இரா.நரேந்திரன், ஓ.ஏ.நாகலிங்கம், பி.எம். யாழினி, பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன், வி.ரமேஷ் (எ) நீலகண்டன், ஏ.பி.பூர்ணிமா, பி.ஜே.துளசிங்கம், அ.நிர்மலா தேவி, எம்.இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, க.நந்தீஸ்வரன்.

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: ஜெ.பாலமுருகன், எஸ். தனசேகர், க.வினோத், ஜி.ஜே.பிரபு, வானவில்விஜய், எல்.பி.எப். மோகன், எம்.பிரோஸ்கான், பி.விஜயகுமார், எம்.விநாயகம், து. ஆயிரம், துரைக்கண்ணன், இரா.வீரமணி, மா.அசோக்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜா முகம்மது, ஜி. பி.பிரதீப்குமார், ஆர்.எஸ். சித்திக், எல்.சம்பத்குமார், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி மற்றும் வட்டகழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர் மா.ருத்ரமூர்த்தி நன்றி கூறினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

படிக்கக் கூடாது, பள்ளிக்கூடங்களை மிதிக்கக் கூடாது, வேலைகளை அடையக் கூடாது என்று நூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை ஒடுக்கப்பட்டிருந்த மக்களுக்காக வகுப்பு வாரி உரிமை என சொல்லப்படும் சமுகநீதியால் பட்டியல் இன மக்களையும் பழங்குடி மக்களையும் பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களையும் படிக்கவும் வேலைவாய்ப்பு பெறவும் வைத்த சமூகநீதியை சிதைப்பதற்காகத்தான் தேசிய கல்விக் கொள்கை என்ற மும்மொழி கல்வி மூலம் இந்தியை திணிக்க முயலும் ஒன்றிய அரசை கண்டித்து இந்தி மொழியை திணிப்பதற்காக ஒன்றிய அரசு எந்த ரூபத்தில் முயன்றாலும் தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் தமிழினத்துக்கும் எதிரான எந்த முயற்சிகளும் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இருக்கும் வரை இந்த மண்ணுக்குள் வர முடியாது என கர்ஜித்த கழகத்தலைவரை வணங்கி இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

**ஒன்றிய அரசுக்கு கண்டனம்!**

ஒருங்கிணைந்த சென்னை மாவட்ட தி.மு.க. சார்பில் கல்வி நிதி தர மறுக்கும் ஒன்றிய அரசை கண்டித்து ஒன்றிய சுங்கத்துறை அலுவலகம் அருகில் 18.2.2025 செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணி அளவில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு ஆர்பரித்த துணை முதலமைச்சர் அவர்களுக்கும் தோழமைக்கட்சி தலைவர்களுக்கும் சென்னை மாவட்டத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகளுக்கும் இக்கூட்டம் மனமார்ந்த நன்றியை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

23.02.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் சென்னை, ரெட்டேரி, ஜி.பி.எல்.மகாலில், கொளத்தூர் கிழக்கு பகுதி செயலாளர் ஐ.சி.எப்.வ.முரளிதரன் மகன்மு.முகேஷ்வர்ஸ்ரீதிவ்ய கணபதி ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்த கழகத் தலைவர்தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் 22.2.2025 சனிக்கிழமை மாலை 6.00 மணி அளவில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் வருகை தந்து மணமக்களை வாழ்த்திய துணை முதலமைச்சர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்து இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

சென்னை கொளத்தூர் பெரியார் நகரில் உள்ள அரசு புறநகர் மருத்துவமனை வளாகத்தில் 210 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரை மற்றும் ஆறு தளங்களுடன் கட்டப்பட்ட புதிய மருத்துவமனைக்கு பெரியார் அரசு மருத்துவமனை என பெயர் சூட்டிய முதலமைச்சருக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்தும்,27.2.2025 வியாழக்கிழமை அன்று இம் மருத்துவமனையை மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்க திறந்து வைக்க வருகை தரும் முதலமைச்சருக்கு சிறப்புமிகு வரவேற்பு அளிக்கவும், தொடர்ந்து 28.02.2025 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணி அளவில் சென்னை, கொட்டிவாக்கம், ஒய்.எம்.சி.ஏ வளாகத்தில் கழக தலைவர் முதலமைச்சர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பெருந்திரளாக கலந்து கொள்ள முடிவெடுத்து கூட்டம் நிறைவேற்றியது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.


# சென்னை தென் மேற்கு மாவட்ட கழக

## பகுதிச் செயலாளர்கள், வட்ட கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ அறிவிப்பு!



சென்னை தென்மேற்கு மாவட்ட கழக பகுதிச் செயலாளர்கள், வட்டகழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (25.02.2025) செவ்வாய்கிழமை மாலை 6.00 மணியளவில் சி.பி.ராமசாமி சாலையில் உள்ள அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் அ.சந்திரசேகர் தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே, இக்கூட்டத்தில், மாவட்ட கழக நிர்வாகம், பகுதிச்செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், ஆகியோர் தவாறமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக தலைவர் பிறந்தநாள் விழா மற்றும் கழக ஆக்க பணிகள்.

**மயிலை த.வேலு எம்.எல்.ஏ.**

சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க.






புனித தோமையார் மலை வடக்கு ஒன்றியம் சார்பில் செயல் வீரர்கள் கூட்டம் ஒன்றிய அவைத்தலைவர் எம். சக்தி தலைமையில் கலைஞர் அரங்கம் (மூவரசம்பட்டு பஞ்சாயத்து அலுவலகம் அருகில்) நடைபெற்றது. கூட்டத்தில் ஒன்றிய செயலாளர் ஜிகே விவேகானந்தன் (எ) ரவி சிறப்புரை யாற்றினார். இதில் ஒன்றிய இளைஞரணி செயலாளர் பி. பிரசாத், மாவட்ட பிரதிநிதி டி,புருஷோத்தமன் இளங்கோவன் மணல்செல்வம், மூவரசன் பட்டு ஊராட்சி மன்ற துணைத் தலைவர் எம்.பி பிரகாஷ் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

# சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரையாற்றினார்!

சென்னை, பிப். 25-

சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக்கூட்டம் நேற்று 24-2-2025 மாலை சென்னை எஸ்.ஆர்.பி. டூல்ஸ் அருகில் உள்ள கொட்டிவாக்கம் ஒய்.எம்.சி.ஏ., மைதானத்தில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்துகொண்டு உரையாற்றினார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் என்.வி. என்.கனிமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, ஏ.எம். வி.பிரபாகர்ராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.தனசேகரன், எஸ்.அருணாச்சலம், பாலவாக்கம் க.சோமு, மாநில தேர்தல் பணிக்குழு செயலாளர் வேளச்சேரி பி.மணிமாறன், மாவட்ட துணைச் செயலாளர்கள் பாலவாக்கம் மு.மனோகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன், வாசுகிபாண்டியன், மாவட்ட பொருளாளர் வேளச்சேரி எஸ்.பாஸ்கரன்,

பகுதி கழக செயலாளர்கள் பெருங்குடி எஸ்.வி. ரவிச்சந்திரன், எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், கே.கண்ணன், மு.ராஜா, துரை.கபிலன், சு.சேகர், நொளம்பூர் வே. ராஜன், வி.இ.மதியழகன், ஒன்றியக் கழக செயலாளர் கோவிலம்பாக்கம் வெங்கடேசன், துரை.வீரமணி, தலைமைப் பொதுக் குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், மேடவாக்கம் ரவி, ஆர். பாலசுந்தரம், எஸ்.ஏ.அரிகிருஷ்ணன், அடையார் பி.ஜே.பாஸ்கர், தங்கராஜ், தா.பஷீர் மற்றும் ரத்னா லோகேஷ்வரன், மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளர் எம்.எஸ்.ஹரிபாபு,

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எம்.விநாயகமூர்த்தி, ஆர்.கிருஷ்ணகுமார், ஜெ.இ.பாண்டியன், கோட்டூர் பிரகாஷ், சங்கர் கணேஷ், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் பா.அருண்குமார், சைதை சாதிக், வேளச்சேரி ஆனந்தம், கனிமொழிதனசேகரன், சி.பரிமேலழகர், எம். பார்த்திபன், நிஷா, சி.சுரேஷ், வழக்கறிஞர் ஜெகதீஸன், மணிகண்டன் நாடிமுத்து, டாக்டர் அனீஷ், அடையாறு சி. சுரேஷ், சசிக்குமார், உள்ளிட்ட வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

## இந்தித் திணிப்பு: ஒன்றிய அரசைக் கண்டித்து கண்டனக் கூட்டங்கள்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

### கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, பிப்.25

கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில நிர்வாகிகள் கூட்டம் நேற்று (24.02.2025) காலை 11.00 மணியளவில் அண்ணா அறிவாலயத்தில் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் செயலாளர்கள் திருவாரூர் அர. திருவிடம், இறையன்பன் குத்தூஸ் மற்றும் துணைச் செயலாளர்கள் திருச்சி எழில்மாறன், செல்வேந்திரன், கெம்மங்குப்பம் சிகோபி, ஷாகிர் உசேன், எம்.எஸ்.ஹரிபாபு ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

நமது ஒப்பற்ற தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாளில் திராவிடச் சமுதாயம் காட்டும் நன்றிகளின் அடையாளமாக, கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் சார்பில் மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகள் ஊர் தோறும் கொடியேற்றியும், கழக சாதனைகளை துண்டுப் பிரசுரங்களாக இல்லந்தோறும் வழங்கியும், தெருமுனைக் கூட்டங்கள் நடத்தியும் கொண்டாடுவதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

ஒரு இனத்தை அழிக்க வேண்டுமென்றால் அந்த இனத்தின் மொழியையும், கலாச்சாரத்தையும் அழிக்க வேண்டும் என்று குடியரசுத் துணைத் தலைவர் ஜகதீப் தன்கர் வெளிப்படையாகவே அறிவித்து அதன் தொடர்ச்சியாக, தமிழைச் சிதைக்கும் புதிய கல்விக்கொள்கையை அறிவித்து மாநிலத்தின் கல்விக்கான நிதியினை வழங்காமல் வஞ்சிக்கும் ஒன்றிய அரசின் தடித் தனத்தினைக் கண்டித்து மார்ச் மாதம் முழுதும் கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் சார்பில் மாவட்டந் தோறும் கண்டனப் பொதுக்கூட்டங்கள் நடத்துவதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, ரெட்டேரி குமரன் மருத்துவமனை சார்பில் மாபெரும் மருத்துவ முகாம் 17 வது வட்டம் கொசப்பூர் சௌபாக்கியா நகர் பகுதியில் நடைபெற்றது. 300க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயன் பெற்ற மருத்துவ முகாமில் மருந்து மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டன. வட்டச் செயலாளர் கே.கருணாகரன் தலைமையில் மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர் பி. குணசேகரன், சி. மூர்த்தி, சி. பாலாஜி, எம். என் .அஜய் தென்னவன், டி.திவாகர்,வி. சுமிர், ஜி.கார்த்திக், ஜி.பூபாலன், வழக்கறிஞர் எம்.என்.தளபதி உள்ளிட்ட பல கலந்து கொண்டார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.முத்துசாமி

**பிப்ரவரி 25 (2018)**



மாணவப் பருவத்தில் தலைவர் கலைஞர் அவர்களால் ஈர்க்கப்பட்டு, கழக மாணவர் அணியில் சேர்ந்து, பின்னர் மாவட்ட மாணவர் அணி மற்றும் இளைஞர் அணி அமைப்பாளர், வட்டக் கழக பிரதிநிதி, மாவட்டக் கழக பிரதிநிதி, தலைமை செயற்குழு உறுப்பினர், இருமுறை நகர செயலாளர், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர். கழக தீர்மானக்குழு உறுப்பினராக திறம்பட பணியாற்றி தலைவர் கலைஞர் அவர்களின் நன்மதிப்பை பெற்றவர்.

மாவட்ட ஊராட்சித் தலைவராகவும், அர்பன் கூட்டுறவு வங்கி தலைவராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“எத்தனையோ சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் இடையில் கழகம் கம்பீரமாக நிற்பதற்கு முத்துசாமி போன்றவர்கள்தான் காரணம்” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**